இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 42 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 04 – திங்கட்கிழமை 21 செப்டம்பர் 2026 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 42 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 04 - Monday 21 September 2026 - Dak 12 Pages ₹ 5.00

## கழக முப்பெரும் விழா விருதுகள் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!




2026 தி.மு.க. முப்பெரும் விழா – நேற்று முன்தினம் (19.09.2026 – சனிக்கிழமை) மாலை 5 மணியளவில் சென்னை அண்ணா அறிவாலயம் – கலைஞர் அரங்கத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பெரியார் விருது – கு.செல்லப்பாவுக்கும், அண்ணா விருது – ஜி.கே.சுபாஷ்க்கும், கலைஞர் விருது – திருச்சி சிவா எம்.பி.க்கும், பாவேந்தர் பாரதிதாசன் விருது – கனிமொழி என்.வி.என்.சோமுவுக்கும், பேராசிரியர் விருது – மிசா எஸ்.அகமது தம்பிக்கும், மு.க.ஸ்டாலின் விருது – நா.இளையராஜாவுக்கும், முரசொலி அறக்கட்டளை சார்பில் ''முரசொலி செல்வம் விருது'' ஊடகவியலாளரும் எழுத்தாளருமான ப.திருமாவேலனுக்கும் வழங்கினார். இதில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி, க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி, திருச்சி என்.சிவா, ஆ.இராசா, அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் எஸ்.ஆஸ்டின், ப.தாயகம் கவி, கழக செய்தி தொடர்பு குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு ஆகியோர் பங்கேற்றனர்.

## இயக்கமும் – கொள்கையும்தான் பெரிது என நினைப்பவர்கள் உடன்பிறப்புகள்!

## அவதூறு பரப்புவோருக்கு நாங்கள் வட்டியும் முதலுமாகத் திருப்பித்தரும் நேரம் விரைவில் வரும்!

# ஜனநாயகம் மரணமடைந்ததால் வரும் இடைத்தேர்தல்!

## ‘ரீல்ஸ்’ ஆட்சிக்கு இடைத்தேர்தலில் தக்கப்பாடம் புகட்டுவீர்!

## முப்பெரும் விழாவில் – தலைவர் மு.க.ஸ்டாலின் எழுச்சியுரை!

**சென்னை, செப். 21 -**

**“நடைபெற உள்ள இடைத்தேர்தல், ஜனநாயகம் மரணமடைந்ததால் வரும் தேர்தல்!” “இயக்கமும் கொள்கையும் தான் பெரிது என்று நினைப்பவர்கள் உடன்பிறப்புகள்; அவதூறு பரப்புவோருக்கு நாங்கள் வட்டியும் முதலுமாகத் திருப்பித் தரும் நேரம் விரைவில் வரும்!” என்றும் கழக முப்பெரும் விழாவில் விருதுகள் வழங்கி உரையாற்றுகையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

**சென்னை - அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நேற்று முன்தினம் (19-9-2026), நடைபெற்ற கழக முப்பெரும் விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு: -**

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாரின் பிறந்த நாள், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாள், அறிவியக்கமாம் திராவிட முன்னேற்றக் கழகம் உதயமான நாள் - இந்த மூன்றையும் இணைத்து, முப்பெரும் விழாவாகக் கொண்டாடி, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தையே நாம் ‘திராவிட மாதமாக’க் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்!

### ஓய்வெடுக்க மனம் கேட்கவில்லை முப்பெரும் விழாவில் பங்கேற்கிறேன்!

கடந்த 15-ஆம் தேதி நடைபெறவிருந்த இந்த விழா, திடீரென்று எனக்கு ஏற்பட்ட காய்ச்சல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டு இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. மருத்துவர்கள் என்னை இன்னும் சில நாட்கள் ஓய்வில் இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். ஆனால், எனக்கு மனசு கேட்கவில்லை. அதனால் தான், தந்தை பெரியார் பிறந்தநாளன்றே அய்யாவின் சிலைக்கு மாலை அணிவித்துவிட்டு, சமூகநீதி நாள் உறுதிமொழி எடுத்தேன். இன்று இந்த முப்பெரும் விழாவுக்கும் வந்திருக்கிறேன்.



தலைவர் கலைஞர் தொடங்கி வைத்த இந்த முப்பெரும் விழாக் கொண்டாட்டத்தில், கழகத்திற்காக உழைத்த தீரர்களுக்கு தொடர்ந்து விருதுகளை வழங்கி வருகிறோம். அந்த வகையில், இந்த ஆண்டுக்கான விருதுகளைப் பெற்றுள்ளவர்களின் சிறப்புகளை, அவர்கள் ஆற்றியிருக்கும் அரும்பணிகளை, தியாகப் பணிகளை இங்கு ஒளிபரப்பப்பட்ட வீடியோவில் நீங்கள் பார்த்தீர்கள்.

### விருது பெற்றவர்களை வாழ்த்துகிறேன்! பாராட்டுகிறேன்!

● தந்தை பெரியார் விருதைப் பெற்றுள்ள அண்ணன் கு. செல்லப்பா அவர்கள் - இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டத்தின் போது கைதாகி, 81 நாட்கள் சிறையில் இருந்த பெருமைக்குரியவர்.

● பேரறிஞர் அண்ணா விருதைப் பெற்றுள்ள சேலம் ஜி.கே.சுபாஷ் அவர்கள் - தலைவர் கலைஞர் அவர்களே, “அவரை சுபாஷ் என்று சொல்வதைவிட “சபாஷ்” என்றுதான் பாராட்டுவேன்” என்று சொல்லியிருக்கிறார்!

தொடர்ச்சி 3–ஆம் பக்கம்

“

### த.வெ.க. ஆட்சியில் இரண்டுக்கு நடுவில்தான் போட்டி!

## ஒன்று மின்வெட்டு! இன்னொன்று அரிவாள் வெட்டு!

**த.வெ.க. ஆட்சியில் இரண்டே இரண்டுக்கு நடுவில்தான் போட்டியே... ஒன்று மின்வெட்டு! இன்னொன்று அரிவாள் வெட்டு! இப்படித்தானே ஆக்சன் செய்வார். எது அதிகம் என்பதுதான் போட்டியே! பட்டப்பகலில் கொலைகள், துப்பாக்கிச் சூடுகள், ஆளுங்கட்சியினரே போதைப்பொருட்களை விற்பனை செய்வது, பாலியல் வன்கொடுமைகளில் ஈடுபடுவது என குற்றவாளிகளின் வேட்டைக்காடாகத் தமிழ்நாடு மாறியிருக்கிறது. த.வெ.க. ஆட்சியில் சட்டமும் இல்லை, ஒழுங்கும் இல்லை! ஆனால், முதலமைச்சராக இருப்பவருக்கு இதைப் பற்றியெல்லாம் துளிகூடக் கவலையே இல்லை.**

”